**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8051851

1. District மாவட்டம் : கிருஷ்ணகிரி    PS காவல்நிலையம்: ஊ.த.க. பிரிவு,    Year ஆண்டு: 2020    FIR No. மு.த.அ. எண்: 13/AC/2020    Date நாள்: 12.12.2020
2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம் 1988    Sections பிரிவுகள்: 7, 12 r/w 7
   (ii) Act சட்டம்: திருத்தியமைக்கப்பட்டது 2018    Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :
3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல்    Date to : நாள் வரை 12.12.2020
   Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல்    Time to : நேரம் வரை காலை 04.10 மணிக்கு முன்பு.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்    Time : நேரம் 12.12.2020 காலை 11.00 மணி.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்    Time : நேரம்
4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக    எழுத்து மூலம்.
5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 55 கி.மீ, மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி    போக்குவரத்து துறை சோதனைச்சாவடி, பாகலூர் @ நல்லூர், ஓசூர்.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S :    District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    மாவட்டம்
6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்    திரு. R. சந்திரமௌலீஸ்வரன்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்    திரு. P. ரவீந்திரன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 37    (d) Nationality : நாட்டினம்    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் அறிவியல் அலுவலர்-I    (g) Address : முகவரி    தடயவியல் ஆய்வகம், ஆட்சியரகம், சேலம்.
7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) திரு. N. சேரன் [illegible] (46), த/பெ. N. நாராயணன், மோட்டார் வாகன ஆய்வாளர் (மு.நி.2), போக்குவரத்து துறை சோதனை சாவடி, பாகலூர் @ நல்லூர், ஓசூர்.
   2) திரு. செ. செல்வமணி (44), த/பெ. K. கணபதி, எண். 51/C-24, காந்தி நகர், ஓசூர்.
8. Reasons for delay in reporting by the complainant / Informant
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   தாமதமில்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
[signature] 12/12/2020

[signature] 12/12/2020
Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
12.12.2020 – 13.00 மணி.

Name: பெயர் S. முருகன்,......
Rank: நிலை ................................ No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
உ.நா.க. பிரிவு,
திருத்தணி.

**கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.13/AC/2020 u/s 7 and 12 r/w 7 of the Prevention of Corruption act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல்அறிக்கையின் வ.எண் 12 ன் இணைப்பு**

இன்று 12.12.2020 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்திலிருந்தபோது என்னிடம் திரு.R.சந்திரமௌலீஸ்வரன், ஆய்வுக்குழு அலுவலக ஆய்வாளர்-I, ஆய்வுக்குழு அலுவலகம், சேலம், தருமபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள், (இருப்பு) மாவட்ட ஆட்சியரகம், சேலம் அவர்கள் எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு.

அனுப்புதல்: திரு.R.சந்திரமௌலீஸ்வரன், ஆய்வுக்குழு அலுவலக ஆய்வாளர்-I, ஆய்வுக்குழு அலுவலகம், சேலம், தருமபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள், (இருப்பு) மாவட்ட ஆட்சியரகம், சேலம். பெறுதல்: காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கிருஷ்ணகிரி. அய்யா, கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் To பாகலூர் சாலையில், நல்லூர் பிரிவு சாலைக்கு அருகில் உள்ள போக்குவரத்துத் துறையின் பல்நோக்கு சோதனை சாவடியில் பணிபுரியும் அலுவலர்கள் அந்த சோதனை சாவடியை கடந்து செல்லும் வாகனங்களின் விதிமீறல்கள் மீது நடவடிக்கை எடுக்காமலிருக்கவும், நடைசீட்டுகளில் முத்திரை பதிக்கவும், வாகன ஓட்டிகளிடமிருந்தும் உரிமையாளர்களிடமிருந்தும் கையூட்டாக பணம் பெறுவதாக கிடைத்த நம்பகமான தகவலின் பேரில் இன்று 12.12.2020 ஆம் தேதி அதிகாலை 04.10 மணிக்கு நான் மற்றும் கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.எஸ்.முருகன் மற்றும் காவலர்களுடன் திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. தணிக்கையின் போது பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த திரு.G.வேல்மணி என்பவர் அந்த சோதனை சாவடிக்கு முன்புறம் நின்றுகொண்டு அந்த வழியாக வரும் வாகனங்களை டார்ச் அடித்து நிறுத்திக்கொண்டிருந்தார். அவரை விசாரிக்க, மேற்படி சோதனை சாவடியின் மோட்டார் வாகன ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வாகனங்களை நிறுத்துதல் மற்றும் கணினியில் தற்காலிக அனுமதிசீட்டு போன்றவற்றை பதிவு செய்தல் போன்ற பணிகளை செய்துவருவதாகவும், அதற்காக தனக்கு அவர் தினந்தோறும் ரூ.500/- தருவதாகவும் தெரிவித்தார். மேலும் அந்த சோதனை சாவடியின் நுழைவாயிலின் அருகே நாற்காலியில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் விலாசம் கேட்டுதெரிந்த திரு.C.நாகராஜ் என்பவரை விசாரிக்க, அவர் மேற்படி சோதனை சாவடியின் மோட்டார் வாகன ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வாகனங்களை நிறுத்தும் பணியில் தான் ஈடுபட்டு வருவதாகவும் தனக்கு அவர் தினந்தோறும் ரூ.500/- தருவதாகவும் தெரிவித்தார். மேற்படி அலுவலகத்தில் கிழக்கு முகம் பார்த்தவாறு இரண்டு இருக்கைகள் இருந்தன. அதன் முன்பு இரண்டு மேசைகளும் இருந்தது. அந்த இரண்டு இருக்கைகளும் காலியாக இருந்தன. மேற்படி தனிநபர் திரு.G.வேல்மணி அவர்களிடம் மோட்டார் வாகன ஆய்வாளரைப்பற்றி கேட்க, அவர் மேற்படி அலுவலகத்தின் மேற்கு பகுதியில் உள்ள உட்புற அறையில் படுத்து தூங்கிகொண்டிருப்பதாக தெரிவித்தார். தனிநபர் திரு.G.வேல்மணி அவர்களிடம் மோட்டார் வாகன ஆய்வாளரை அழைத்துவரும்படி கூறியதன்பேரில்

திரு.G.வேல்மணி அவர்கள் அந்த அறைக்கு சென்று, மோட்டார் வாகன ஆய்வாளரை அழைத்துவந்தார். மோட்டார் வாகன ஆய்வாளர் அந்த இருக்கையில் வந்து அமர்ந்ததும், அவரிடம் என்னையும், கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களையும் அறிமுகம் செய்து கொண்டு, அவரைபற்றி விசாரிக்க, தனது பெயர் N.கோகுலகிருஷ்ணன் என்றும் தான் போக்குவரத்துத் துறையின் நல்லூர் பிரிவு சாலைக்கு அருகில் உள்ள பல்நோக்கு சோதனை சாவடியில் மோட்டார் வாகன ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். உடனே அவர், தனக்கு தலைசுற்றுவதுபோல் இருப்பதாக தெரிவித்தார். அவரது உடல்நலனை கருத்தில்கொண்டு, அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கும் வகையில் மேற்படி அலுவலகத்திலிருந்த தனிநபரான திரு.G.வேல்மணி என்பவரை அலுவலகத்திலேயே விட்டுவிட்டு, மற்றொரு தனிநபரான திரு.C.நாகராஜ் என்பவரை உடன் அழைத்துக்கொண்டு கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தின் அரசு வாகனம் எண் TN 07 G 2806 ல் மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.N.கோகுலகிருஷ்ணன் அவர்களை அதிகாலை சுமார் 04.15 மணிக்கு அழைத்துக்கொண்டு அருகிலிருந்த சந்திரசேகரா மருத்துவமனையில் அவசரசிகிச்சைபிரிவில் அதிகாலை சுமார் 04.20 மணிக்கு சேர்க்கப்பட்டு, முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கும் தகவலை ஓசூர் வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்களுக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் ஓசூர் வாட்டார போக்குவரத்து அலுவலர் திரு.N.ஈஸ்வரமூர்த்தி அவர்கள் மேற்படி மருத்துவமனைக்கு வந்து அறிமுகம் செய்துகொண்டார். அவரிடம் தணிக்கைக்கு வந்த விவரத்தினையும், அப்போது மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.N.கோகுலகிருஷ்ணன் அவர்களுக்கு தலைசுற்றுவதுபோல் இருப்பதாக அவர் தெரிவித்ததால், அவரை மருத்துவமனையில் அனுமதித்த விவரத்தினையும் தெரிவிக்கப்பட்டது. அதன்பிறகு வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்கள் மேற்படி சோதனை சாவடிக்கு மாற்று மோட்டார் வாகன ஆய்வாளராக திரு.எஸ்.சுரேஷ் என்பவரை நியமித்து, தொலைபேசி வாயிலாக அவருக்கு அந்த தகவலை தெரிவித்து, அந்த சோதனைசாவடிக்கு அனுப்பிவைத்தார். மேலும், மேற்படி மருத்துவமனையில் உள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.N.கோகுலகிருஷ்ணன் அவர்களை உடனிருந்து பார்த்துக்கொள்ள, தனிநபர் திரு.C.நாகராஜ் அவர்களுடன், ஓசூர் வாட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரியும் கண்காணிப்பாளர் திரு.சி.வி.குமார் என்பவரை அந்த மருத்துவமனைக்கு வருமாறு கேட்டுக்கொண்டதன் பேரில், அவரும் அங்கு வந்தார். பிறகு மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.N.கோகுலகிருஷ்ணன் அவர்களின் உடல்நிலை குறித்து மேற்படி மருத்துவமனையின் இரவு பணி மருத்தவரிடம் தகவல் கேட்க, அவர் மேற்படி நபரின் உடல்நிலை சீராக உள்ளது என்றும், இரத்த அழுத்தம் சற்று அதிகமாக உள்ளது என்றும் தெரிவித்தார். அவருடைய உடல் நிலையை கருத்தில்கொண்டு, அவரை உடனிருந்து கவனித்துக்கொள்ளும்படி மேற்படி கண்காணிப்பாளர் மற்றும் தனிநபர் திரு.நாகராஜன் ஆகியோருக்கு அறிவுறுத்தப்பட்டது. பிறகு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் காவல் ஆய்வாளர் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.N.ஈஸ்வரமூர்த்தி ஆகியோருடன் அரசு வாகனத்தில் புறப்பட்டு நல்லூர் பிரிவு சாலையில் உள்ள பல்நோக்கு சோதனை சாவடிக்கு காலை 05.45 மணிக்கு வரப்பட்டது. ஏற்கனவே வட்டார போக்குவரத்து அலுவலர் தகவல் தெரிவித்ததன்பேரில் அங்கு மாற்று

பணியிலிருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் அவரைபற்றி கேட்க, அவர் தனது பெயர் திரு.S.சுரேஷ் என்றும், ஒசூர் வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்கள் தனக்கு தொலைபேசிமூலம் தகவல் தெரிவித்ததன்பேரில் மேற்படி சோதனை சாவடிக்கு மாற்று மோட்டார் வாகன ஆய்வாளராக வந்து பணிசெய்துகொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். அதன்பிறகு, வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. S.சுரேஷ் ஆகியோரிடம் தணிக்கைக்கு வந்திருக்கும் விவரத்தினை கூறி, மேற்படி சோதனை சாவடியில் இன்றைய தினம் அரசு கணக்கில் வசூலான தொகை குறித்து கேட்க, மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. S.சுரேஷ் அவர்கள் நேற்று 11.12.2020 ஆம் தேதி காலை 8.00 மணிமுதல் இரவு 8.00 மணி வரையில் பல்வேறு தலைப்புகளின் கீழ் மொத்தம் ரூ.13,450/- வசூல் செய்யப்பட்டிருப்பதாகவும், அதன்பிறகு 11.12.2020 ஆம் தேதி இரவு 8.00 மணி முதல் 12.12.2020 ஆம் தேதி அதிகாலை 05.45 மணி வரையில் அரசு கணக்கில் பல்வேறு தலைப்புகளின் கீழ் மொத்தம் ரூ.27,290/- வசூல் செய்யப்பட்டிருப்பதாகவும், மேற்படி விவரங்களை பதிவேடுகளில் பார்த்து தெரிந்துகொண்டதாகவும் தெரிவித்து, மேற்படி தொகையினை எடுத்து ஆஜர் செய்தார். அந்த தொகையினை சரிபார்க்க அதில் பணம் மொத்தம் ரூ.40,740/- சரியாக இருந்தது. மேற்படி அரசு பணம் ரூ.40,740/- ஐ அரசு கணக்கில் செலுத்தும் பொருட்டு மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. S.சுரேஷ் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன்பிறகு, மோட்டார் வாகன ஆய்வாளரின் இருக்கைக்கு எதிரே இருந்த மேசையினை சோதனை செய்ததில், அந்த மேசையின் மீதிருந்த ஒரு பதிவேட்டிற்கு அடியில் 500, 200, 100, 50, 20 மற்றும் 10 ரூபாய் தாள்கள் இருந்தன. அந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்கையில் அதில் மொத்தம் ரூ.25,920/- இருந்தது. மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. S.சுரேஷ் அவர்களிடம் அந்த பணத்தை பற்றி விளக்கம் கேட்க, தான் வட்டார போக்குவரத்து அலுவலர் கூறியதன்பேரில் இப்போதுதான் சோதனை சாவடிக்கு வந்ததாகவும், அந்த பணத்தை பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் தெரிவித்தார். மேற்படி பணத்தை பற்றி அந்த அலுவலகத்திலிருந்த தனிநபர் திரு.G.வேல்மணி என்பவரிடம் கேட்க, அவர் மேற்படி பணம் இன்றைய தினம் வாகன ஓட்டுநர்களுக்கு நடைச்சீட்டில் சீல் போட்டுக் கொடுத்தமைக்காகவும், விதி மீறல்கள் மீது இணக்கக் கட்டணம் வசூல் செய்யாமலிருக்கவும், தற்காலிக அனுமதி சீட்டு வழங்கியதற்காகவும் வாகன ஓட்டுநர்களால் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.N.கோகுலகிருஷ்ணன் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட கையூட்டு பணத்தை நான் வாங்கி வைத்திருந்தது என்று தெரிவித்தார். அந்த பணம் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சுரேஷ் அவர்கள் இங்கு வருவதற்கு முன்பாகவே பெறப்பட்டது என்றும் தெரிவித்தார். எனவே, அந்த சோதனைசாவடியை கடந்து சென்ற வாகன ஓட்டிகளிடமிருந்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.என்.கோகுல கிருஷ்ணன் மேற்சொன்ன காரணங்களுக்காக கையூட்டாக பெற்றிருக்கக்கூடும் என்று நம்புவதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதால் மேற்படி பணம் ரூ.25,920/- ஐ இந்த தணிக்கையின் போது கைப்பற்றப்பட்டது. அதன்பிறகு, மேற்படி அலுவலகத்தின் மேற்கு பாகத்திலுள்ள பதிவேடுகள் இருப்பு அறை மற்றும் வடக்கு பாகத்தில் உள்ள சமையல் அறை ஆகியவற்றை சோதனை செய்யப்பட்டதில் கைப்பற்றக் கூடிய தடயங்கள் எதுவும் இல்லை. இந்த திடீர் தணிக்கையின்போது நல்லூர் பிரிவு பாதையில் உள்ள போக்குவரத்துத் துறை பல்நோக்கு சோதனை சாவடியில் பணிபுரிந்த தனிநபர் திரு.G.வேல்மணி அவர்களிடம் வாக்குமூலம் பெறப்பட்டது. மேலும் ஒசூர் To பாகலூர் சாலையில் நல்லூர் பிரிவு பாதையின் அருகே உள்ள போக்குவரத்து துறை

பல்நோக்கு சோதனை சாவடியை கடந்து சென்ற வாகன ஓட்டுநர்கள் திரு.கண்ணன், திரு.முத்துவேல், திரு.ஹரிகணேஷ் மற்றும் திரு.சென்றாயன் ஆகியோரிடமிருந்து தனித்தனியாக வாக்குமூலங்கள் என்னால் பதிவுசெய்யப்பட்டது. மேலும் கைப்பற்றிய பணத்தையும், தயார் செய்த செயல்முறை நடவடிக்கையையும் ஆஜர் படுத்துகிறேன். நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு ஒப்பம் R.சந்திரமௌலீஸ்வரன். மேற்கண்ட புகாரின் பேரில் கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 13/AC/2020 u/s 7 and 12 r/w 7 of the Prevention of Corruption act 1988 as amended in 2018 ன்படி இன்று 12.12.2020 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலையும், கிருஷ்ணகிரி மாவட்ட சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நடுவர் அவர்களுக்கு அனுப்பியும், மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன்.

12/12/2020
Insptr. VAC, Kgi